அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
ARAN International e-Journal of Tamil Research

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
(Peer Reviewed Journal Multidisciplinary)
ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

Vol:8 Issue :30 April 2026
கோட்டை:8 வாயில்:30 ஏப்ரல் 2026

அரண்
பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran
International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

Founder / Editor in Chief
**Dr PRIYAKRISHNAN**

Publisher
**MR P. JAYAKRISHNAN**

Editorial Board Members
**Dr V SELVAKUMAR**
Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India
selvakumar.v@tamiluniversity.ac.in

**Dr. S. KAVITHA**
School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

**Dr.K.DAYANIDHI**
Assistant Professor & Head i/c , Department of Vaishnavism , University of Madras, TamilNadu, India. dayanidhi@unom.ac.in

**Dr O.MUTHIAH**
Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University) Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

**DR UMADEVI**
Professor In Tamil, Department of Modern Indian Languages And Literery Studies University of Delhi,Delhi . dumadevi@mil.du.ac.in

Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

அரண்
பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
Aran
International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

**DR JAGADEESAN.T.**
Assistant Professor of Tamil, Department of Indian Languages,
Faculty of Arts, Banaras Hindu University,
Varanasi- 221005, Uttar Pradesh,India.

**DR SENTHIL PRAKASH.S**
Teacher – in- charge/Assistant professor (SG),Department of
Tamil, Institute of Languages, Literature& culture,
Visva – Bharathi University,Santiniketan,West
Bengal, India -731235

**DR R TAMILSELVAN**
Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

**Dr SWARNAVEL ESWARAN**
Associate Professor Departments of English, and Media and Information
Michigan State University. USA. eswaran@msu.edu

**Dr (Ms.) NILANKA LIYANAGE**
Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts,
Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,Eastern University Srilanka

**Mrs THULSIVANTHANA UDAYASHANKAR**
Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of
Aesthetic Stidies ,Eastern University, Srilanka

அரண்

Aran

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

**Dr B. DHANANJAYAN**

Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet,
Chennai - 600 021.

**Dr P.SEKAR**

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.sekar@iasetamilnadu.ac.in

நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்

இதழாக்கம்

திரு ப. ஜெயகிருஷ்ணன்

முதன்மை ஆசிரியர்

முனைவர் பிரியாகிருஷ்ணன்

+917299587879

www.aranejournal.com

aranjournal@gmail.com

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# நீதி இலக்கியத்தில் துறவறப் பண்புகள்

*Monastic Traits in Justice Literature*

***R.Divyabharathi,*** *phd Research Scholar of Tamil, (Full Time )Reg No - BDU2110632779055, Thanthai Hans Rover College, Perambalur, Affiliated to Bharathidasan University, Tiruchirapalli, Tamilnadu, India.*

***Guide - Dr. P.S Selvarani,*** *Assistant Professor of Tamil, Thanthai Hans Rover College, Perambalur, Affiliated to Bharathidasan University, Tiruchirapalli, Tamilnadu, India.*

ர.திவ்யபாரதி, **முனைவர் பட்ட ஆய்வாளர் (முழு நேரம் ), Reg No -BDU2110632779055, தமிழாய்வுத்துறை, தந்தை ஹேன்ஸ் ரோவர் கல்லூரி (தன்னாட்சி ), பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது, பெரம்பலூர் 621220, தமிழ்நாடு, இந்தியா.**

முனைவர்: பி. எஸ். செல்வராணி **, முனைவர் பட்ட நெறியாளர், தமிழாய்வுத்துறை, தந்தை ஹேன்ஸ் ரோவர் கல்லூரி (தன்னாட்சி ), பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது, பெரம்பலூர் 621220, தமிழ்நாடு, இந்தியா.**

***ABSTRACT :***

*The state of complete renunciation of human desires is called virtue. Ascetics should change their activities as monks. They should completely give up feelings like desire, affection, and attachment. It is true that the state of liberation that changes from non-existence is greatly talked about. The highest value of ascetics is the one who regrets himself and asks for the good of the worldly beings. Ascetics are people who have the high quality of seeing all life together without leaning on any side. The high concept of being ready to give up anything at any time, if you want to live a life without suffering, can be learned from the ascetic thoughts. Here we will find various ideas like these.*

***Keywords : Religious Literature, Monasticism, Monks, Ascetic thoughts, Human desires***

**ஆய்வுச் சுருக்கம் :**

மனிதனின் ஆசைகளை முற்றும் துறந்த நிலை அறநிலை எனப்படும்.துறவறம் மேற்கொள்வோர் அறவோராகத் தமது செயல்பாடுகளை மாற்றி அமைத்துக் கொள்ள வேண்டும்.ஆசை, பாசம், பற்று போன்ற உணர்வுகளை முற்றும் அளிக்க வேண்டும். இல்லறத்தாரில் இருந்து மாற்றியமைக்கும் முக்திநிலை பெரிதாக பேசப்படும் என்பது உண்மை.தன்னை வருத்திக்கொண்டு உலக உயிர்களுக்கு நன்மை வேண்டுபவர் என்பது துறவறத்தாரின் உயர்ந்த மதிப்பாகும். துறவறத்தார் எந்த பக்கமும் சாயாமல் எல்லா உயிர்களையும் ஒன்றாக பார்த்தல் என்ற உயரிய பண்பினை கொண்டவர்கள் ஆவர்.துன்பமில்லாத வாழ்வு வாழ வேண்டுமெனில் எந்த நேரத்திலும் எந்தப்பொருளையும், துறக்க தயாராக இருக்க வேண்டும்

என்ற உயரிய கருத்தினை துறவறச் சிந்தனைகளில் இருந்து அறிய முடிகின்றது. இவை போன்ற பல்வேறு கருத்துக்களை இங்கனம் காண்போம்.

**திறவுச்சொற்கள்:** சமய இலக்கியம், துறவறம், துறவிகள், துறவறச் சிந்தனைகள், மனித விருப்பங்கள்

**முன்னுரை:**

பற்றுக்களை அறுத்த மனிதனின் புகழிடமாக விளங்குவது துறவாகும். துறவி என்ற சொல் தரும் பொருள் ஆசையைத் துறத்தல் என்பதாகவே அமைகின்றது. துறவறம் என்பது கடினமானது அதேசமயம் மகிழ்வினை தரக்கூடியது இந்து மதம் வலியுறுத்தும் மனித வாழ்வில் துறவறம் கட்டாயமானதில்லை. ஆனால் சமண மதம் போன்ற ஒரு சில மாதங்களில் துறவறம் என்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. துறவறம் மேற்கொள்வோர் அறவோராகத் தமது செயல்பாடுகளை அமைத்துக் கொள்ள வேண்டும். உலக நன்மைகளுக்காகத் தவம் இயற்றல், நோன்பிருத்தல், உயிர்க்கொலை புரியாதிருத்தல், நிலையாமையை உணர்தல் மற்றும் பிறருக்கு உணர்த்தல், பெண்ணாசை, மண்ணாசை, பொன்னாசைகளை அடியோடு விட்டுவிடுதல், தனக்கு என எதையும் தேடாத பண்பினைக் கொண்டிருத்தல், ஐம்புலன்களை அடக்குதல், புலால் உண்ணாதிருத்தல், உடல் மற்றும் அழகின் மீது கவலையற்று இருத்தல் ஆகிய பண்புகளைக் கொண்டவர்களாகத் துறவறம் மேற்கொள்வோர் இருக்க வேண்டும். அவர்களது செயல்பாடு போற்றப்படுவதோடு அதுவே மதிப்பாக மற்றவர்களுக்கு உணர்த்தப்படும் தகுதி பெற்றவையாக மாறிவிடும். அத்தகைய துறவறம் மதிப்புகள் பற்றி அறநூல்களின் வழி விளக்குவதை இக்கட்டுரை நோக்கமாக கொண்டுள்ளது.

**துறவு:**

துறவு என்பது ஆசை, பாசம், பற்று ஆகியவற்றை விடுதலும் உலக இன்பங்களின் மேல் நாட்டமின்றி வாழ்தலுமாகும். துறவி என்பவர் தூய்மையானவர் என்ற அளவில் வாழத்தக்கவராவர். பற்றை அறுத்தவர் என்பதால் அவர்களுக்கு இவ்வுலக இன்ப துன்பங்கள் பொருட்டல்ல. பசி நோக்காமல், கண் துஞ்சாமல் மறுமை ஒன்றையே எண்ணியவராக அவர்களது செயல்பாடுகள் அமையும் இதனை,

"யாதெனின் யாதெனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன்" (குறள்-**341**)

என்ற குறள் கூறும் கருத்து துறவியின் தன்மையைக் காட்டுகின்றது. உலகப் பற்றுக்களை விட்டு நீங்கிய ஒருவருக்கு உலகத்தில் நிகழும் நிகழ்வுகளால் எத்தகைய பாதிப்புகளும் வருவதில்லை. அவர்கள் **"செத்தாரைப் போன்று"** தமது செயல்பாட்டினைக் கொண்டவர்களாக இருப்பார்கள். மற்றவர்களின் வாழ்விற்காகத் தியாகம் செய்வதோடு, வழிபாடுகளை மேற்கொள்வர் என்பது இவர்களுக்கான மதிப்பினைப் பெற்றுத் தருவதாகும்.

**துறவறம் விளக்கம்:**

இல்லறத்தினால் பெற்ற மாண்புகளைவிடத் துறவறத்தால் அடையும் முக்தி பெரிதாகப் பேசப்பட்டது. இதில் மாறுபட்ட கருத்துக்களும் உண்டு. இல்லறத்தாருக்கு ஏதாகினும் பற்று இருக்கும். ஆனால் துறவறத்தார் நான் எனது என்ற சிந்தனையை மறுத்து பொதுவாழ்விற்காக வாழ்பவர் என்பதோடு தன்னை வருத்திக்கொண்டு உலக உயிர்களுக்கு நன்மை வேண்டுபவர் என்பது துறவரத்தாரின் மதிப்பாகும். துறவறம் மிக உயர்த்திப் பேசப்பெற்றது என்பது உண்மை. மானுட வாழ்க்கையை தன்னை மட்டுமே வைத்து நோக்கும் சுயநல நோக்கில் இருந்து பிரிந்து மற்றவர்களைப் பற்றி கவலைப்படும் துறவு வாழ்க்கையை உயர்த்திப் பாராட்டும் நெறி சைவ, பௌத்தத்தால் நாடு எங்கும் பரவி நிலைப்பெற்றது.

சிற்சில இடங்களில் துறவியரின் ஆதிக்க வாழ்க்கை இருந்திருக்கலாம் என்றாலும், அவர்களும் நெறியோடு வாழ வேண்டும் என்று எதிர்பார்க்கப்பெற்றது. வற்புறுத்த பெற்றது சங்ககாலச் சமுதாயத்தைப்போர் வீரர் சமுதாயம், காதல் சமுதாயம் என்று கருதினால், சங்கம் மருவிய கால சமுதாயத்தை துறவியர் சமுதாயம், தொண்டர் சமுதாயம் என்று அழைக்கலாம். துறவு வாழ்க்கையில் துறவறம் உயர்த்திப் பேசப்பட்ட அதே சமயத்தில் இல்லற வாழ்க்கை நெறியும் உயர்த்தி பேசப் பெற்றது. **துறவியர்க்கு இல்லறத்தார் உதவ வேண்டும். உணவு இடவேண்டும், துறவியல் பள்ளியில் அமர்ந்து படிப்புச் சொல்லித் தர வேண்டும். பொது நிகழ்ச்சியில் தொண்டாற்ற வேண்டும் எனும் அமைப்பால் இல்லறத்தார் துறவறத்தார் இடையே ஒத்திசைந்த வாழ்வு உருவாக்க பெற்றது.[1](க.ப.அறவாணன். அற இலக்கியக் களஞ்சியம் ப — *34)*** இதனால் இல்லறத்தாரும், துறவறத்தாரும் தத்தமது அறநெறி அறிந்து சமுதாய கடமையாற்றுவதற்கான வாய்ப்புகள் ஏற்பட்டன. இவ்வுலக வாழ்வை வலியுறுத்திய நிலைகள் சற்றுமாறி மறுமை உலகம் பற்றிய **எண்ணங்கள் உருவாகின.**

**"இம்மை -மறுமை, இவ்வுலகம்- அவ்வுலகம் பற்றிய எண்ணங்கள் தமிழர்களிடம் இருந்தன என்றாலும் நாற் பொருள் என்னும் பாகுபாடு திருஞானசம்பந்தர் பாடலில் தான் தமிழ் இலக்கியக் காலப்பாதையில் முதன்முதலாக காணப்படுகின்றது".[2] (மு.அருணாச்சலம் - தமிழ் இலக்கிய வரலாறு ப- *1)*** அறம் பொருள் இன்பம் என்ற மூன்று பொருட்களையும் கடந்து வீடுபேறு என்ற சிந்தனைகள் உருவானதன் பின்னணியில் சமயப் பரப்பல் என்ற கொள்கை உள்ளதையும் மறுத்து விட முடியாது.

**"இல்லறம் கொடுத்தலும் மளித்தலும் கோடலும், இன்மையும், ஒழுக்கம் புணர்தல், புணந்தோர்ப் பேணல் மற்றையவுமாம் துறவறமாவது துறவும் அடக்கவும் தூய்மையும், தவமும் அறவினையோம் பலும், மறவினை மறுத்தலும் பிறவுமாம்"[3](சிங்காரவேலு முதலியார்- அபிதான சிந்தாமணி ப — *108)*** என்று கூறும் விளக்கம் இல்லறம் துறவறம் என்றால் என்ன என்பதற்கான அடிப்படைகளை விளக்குகின்றது.**"துறவறம் என்பது இல்லறந்துறத்தல்"[4] (மதுரை தமிழ்ப் பேரகராதி ப — *1134)*** எனப் பொருள் கூறுகின்றது.

**இல்லற இன்பத்தைத் துயித்தறியாதும், துயித்தும் உலக வாழ்க்கையில் அல்லது பிறவித் துன்பத்தில் வெறுப்பும் அல்லது பேரின்ப துய்ப்பின் வேட்கையும் கொண்டு மாணிடப் (பிரமசாரிய) பருவத்திலேனும் மனையற நிலையிலேனும், முறியன் (தபுதாரன்) நிலையிலேனும், மூப்பிலேனும் துறவு பூண்டு அதற்குரிய அறங்களைக் கடைப்பிடித்து நான் எனது என்னும் இருவகைப் பற்றையும் விட்டுப் பிறவியின்று விடுதலை பெறுவது துறவு ஆகும்.[5.] ( தேவநேய பாவாணர் _ தமிழர் வரலாறு, ப — 155)**

**தனிமனித அறம் :**

**"தனிமனிதனுக்கு அறத்தின் சிறப்பை எடுத்துச் சொல்லி ஆசையை அகற்றச் சொல்வது காலால் நடந்து குறித்த இடத்தை அடையச் சொல்வது போன்றது.காலால் நடப்பதால் தவறியோ, இடறியோ விழ நேராது. விழுந்தாலும் பெரிய அடிபடாது. வண்டி ஏறும் ஆசையை விட்டொழிந்தால் வண்டியால் வரும் துன்பமும் தொல்லையும் அகலும். ஆகையால் காலால் நடந்து போவது நன்மை உடையது தான். குடும்பப்பற்றையும் மற்றச் சூழ்வுத் தொடர்களையும் விட்டு துறவியாய்த் தனியே வாழ்ந்து அறநெறி போற்றி உயரும் வாழ்வும் இப்படிப்பட்டதுதான். பழங்காலத்தில் சான்றோர் பலர் குடும்ப வாழ்க்கையிலும் மற்ற துறைகளிலும் வரும் இடுக்கண் பலவற்றையும் எண்ணி பற்றற்ற வாழ்க்கை வாழ, துறவறத்தை வற்புறுத்தினார்கள் .நல்ல வாழ்க்கையில் வாழ்ந்து கொண்டிருக்கும் போதே வாழ்க்கையின் அதிர்ச்சிகளை வறுமை , மூப்பு, மரணம் என்பவற்றைக் கண்டு நடுங்கி வாழ்க்கையே வெறுத்தார்கள்".[6] (மு வரதராசனார் அறமும் அரசியலும். ப — 58.)**என மு. வரதராசனார் கூறுவது துறவறத்தாரின் செயல்டுகளைத் தெரிவிப்பதாகும்.

**இலக்கியங்களில் துறவறம் :**

துறவறம் என்பது மனிதனுக்கு இயல்பாகத் தோன்றும் உடல், உள்ளம் சார்ந்த தேவைகள் அனைத்தையும் நிராகரிப்பது, ஆசை முதலியவற்றிலிருந்து நீங்குவது என்றால் முழுமையாக நீங்கி விடுவது .அதன் பிறகு உலக இன்பியல் பற்றிச் சிறிதளவும் எண்ணம் இன்றி இருத்தல் என்பவையும் அடங்கும் இதனை,

**" தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி**

**வலைப்பட்டார் மற்றை யவர் " (குறள் - 347)**

முற்றும் துறந்தவரே உயர்ந்த நிலையினர் ஆவார். அவ்வாறு துறக்காத மற்றவர் அறியாமையாகிய வளையில் அகப்பட்டவர் ஆவார் என்பது துறவறத்தின் இயல்பையும், மதிப்பையும் காட்டுகிறது. அவ்வாறு முற்றும் துறக்காதவருக்கு துன்பங்கள் விடாமல் பற்றிக் கொள்ளும் என்பதை,

**"பற்றி விடாஅ இடும்பைகள் பற்றினைப்**

**பற்றி விடாஅ தவர்க்கு" (குறள் - 437)**

என்பதன் மூலம் உணரலாம். கடைசிக் காலகட்டத்தில் பார்த்துக் கொள்ளலாம் என துறவறத்தார் எண்ணாமல் எல்லாப் பொருள்களும் உள்ள காலத்திலேயே துறவறம் மேற்கொள்ள வேண்டுமென்பதை,

**"வேண்டின் உண்டாகத் துறக்க துறந்தபின்**

**ஈண்டு இயர் பால பல " (குறள் - 342)**

துன்பமில்லாத வாழ்வு வேண்டுமேயானால் எல்லாக் காலத்திலும் எல்லா பொருளையும் துறக்கத் தயாராக வேண்டும். அதுவே இன்பத்தை ஈடு இணையில்லாமல் வழங்கும். இங்கே கூறப்படும் இன்பம் உலகியல் இன்பம் அல்ல அது துறக்கத்தார் இன்பம். அது தன்னை வருத்திக் கொள்ளும் போது கிடைக்கும் பேரின்பம் என்றே கொள்ள வேண்டும்.

**துறவிகள் :**

துறவறத்தை மேற்கொள்பவர்களைத் துறவிகள் என்று அழைப்பது இவர்கள் உலகில் உள்ள பெரும்பாலான மதங்களிலும் இருப்பவர்கள். ஆனால் ஒவ்வொரு மதத்தினரின் நம்பிக்கைகளுக்கும் வழிபாட்டு முறை மாற்றங்களுக்கும் ஏற்பத்தமது செயல்பாடுகளை வகுத்துக் கொண்டவர்கள் ஆவர். அற இலக்கியங்கள் காட்டும் துறவிகள் பெரும்பாலும் இல்லற வாழ்வை சிறப்பாக வாழ்ந்து முடித்துவிட்டு காம உணர்வுகள் அடங்கிய கொள்கைச் சான்றோராக இருப்பதை காணப்படுகிறது.

**"துறவறம் மனித வாழ்வில் நான்காம் ஆசிரம நிலையாகும். பந்த பாசங்களிலிருந்து விடுபட்டுத் தன்னை வருத்தி துறவு மேற்கொள்ளுதல் இக்காலத்தில் இடம் விட்டு இடம் சென்று, உடல் சுகத்தை துறந்து கடவுளை தியானிப்பதும், தான் அறிந்த உண்மைகளையும் நீதிகளையும் மக்களுக்கு கூறுதலும் ஆகும். சமய வாழ்வில் மக்களை ஈடுபடச் செய்தல் முற்றும் துறந்த நிலையே சந்நியாசமாகும்.” [7] ( https://ta.wikipedia.org/wiki/ சந்நியாசம்.)**துறவி, சந்நியாசி என்பவை ஒரு பொருள் குறித்தவையே ஆகும்.

**துறவிகளின் கடமைகள் :**

மனிதர்களாகப் பிறந்த ஒவ்வொருவருக்கும் கடமைகள் உள்ளன .அவற்றை தனிமனித கடமைகள், சமூக கடமைகள் என்ற இரு பெரும் பகுப்புகளாகப் பிரிப்பர். அவ்வகையில் துறவறம் மேற்கொண்டுள்ள துறவிகளது கடமைகளும் எவையெவை என்று வரையறை செய்யப்பட்டுள்ளன.

**"பக்கம் படாமை ஒருவருக்குப் பாடு ஆற்றல்**

**தக்கம் படாமை, தவம், அல்லாத் தக்கார்**

**இழிசினர்க்கேயானும் பசித்தார்க்கு ஊண் ஈத்தல்**

**கழிசினம் காத்தல் கடன் " (சிறுபஞ்சமூலம் பா - 75)**

துறவிகள் எந்தப் பக்கமும் சாயாமல் எல்லா உயிர்களையும் ஒன்றாக பார்த்தல், உயிர்களுக்கு வரும் துன்பங்களை நீக்கும் ஆற்றல் பெறுதல் உலகில் உள்ள எந்த பொருளின் மீதும் பற்று வைக்காமையும் ஆனா முப்பெரும் கடமைகள் துறவியருக்கு உண்டு .இக்கடமைகளை இனிது நிறைவேற்றுபவர் துறவிகளுக்கான உயர்ந்த மதிப்பினைப் பெறுவர் என்பது உறுதியாகும்.

**துறவியரின் புறத்தோற்றம் :**

மனிதனுக்கு மதிப்பினைப் பெற்றுத் தருவதாக அவனது தோற்றம் அமைகின்றது. அத் தோற்றத்தை அகத்தோற்றம், புற த்தோற்றம் என்று வகைப்படுத்துவர். புறத்தோற்றம் இயற்கையாக அமைவது. அகத்தோற்றம் பண்பினாலும், குணத்தாலும், நடத்தையாலும் உருவாவது. புறத்தோற்றத்தை விட அகத்தோற்றத்திற்கே முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் .புறத் தோற்றத்தில் செய்யப்படும் அலங்காரம் மற்றும் உடுத்தும் ஆடைகள் அல்லது ஆடை உடுத்தாத தன்மை போன்றவை துறவிகளை மற்றவர்களிடமிருந்து வேறுபடுத்திக் காட்டக் கூடியதாக அமைகின்றது.

**" சடை முடியுடன் இருப்பதும் மொட்டை அடித்துக் கொள்வதும் ஆகும். மரவூரி தரித்த துறவியர் சடை, மீசை, தாடி, நகம் இவற்றை வளர்த்தல் வேண்டும்.[8] (திருலோக சீதாராம் _ மனுநீதி பா — 6)**என மனுதர்மம் கூறும் கருத்திலிருந்து மாறுபட்டதாக அற இலக்கிய கால சிந்தனைகள் இருந்துள்ளன. மொட்டை அடித்தல் என்ற தன்மையை சமணர்கள் செய்தார்கள் என்பதை அறிய முடிகின்றது.

**இல்லறத்தை விட துறவரமே சிறந்தது :**

இல்லறம் மற்றவர்களை காக்கும் பெருமை உடையது என்றாலும் அது தனது பெண்டு, தமது மக்கள், தமது பெற்றோர்கள் என்ற தன்முனைப்பு உடையது. ஆனால் துறவறம் உலக நன்மையை மட்டுமே கருத்தில் கொண்டதென்பதால் பண்படிப்படையில் துறவரத்தார் முதன்மையாக கொல்லப்படுவதையும் அறிய முடிகிறது.

**"புல் அறத்தின் நன்று மனை வாழ்க்கை, போற்று உடைத்தேல்**

**நல்லறத் தாரோடும் நட்கலாம், நல்லறத்தார்க்கு**

**அட்டு இட்டு உண்டுஆற்ற வாழ்ந்தார்களே, இம்மையில்**

**அட்டு இட்டு உண்டு ஆற்ற வாழ்வார்" (சிறுபஞ்சமூலம் பா - 98)**

சிறிய அறங்கள் செய்வது விட மனை வாழ்க்கை என்று கூறப்படும் இல்லற அறம் சிறந்ததாகும். ஏனெனில் அவர்கள் இப்பிறவியில் இல்லறக் கடமையைச் செய்யும்போது துறவரத்தாருக்கு செய்ய வேண்டிய கடமைகளையும் சரிவர செய்வார்களேயானால் அவர்களது உணவு முதலிய பிற தேவைகள் அதுவாகவே ஈடேறும் என்பது துறவறத்தை போற்றினால் இல்லறத்தார் பெறும் மதிப்பாக அமைவதைக் காண முடியும்.

**ஆசை தவிர்த்தல் :**

**"ஆசையே துன்பத்திற்கு காரணம்"** என்கிறார் புத்தர். மனித தவறுகளின் பிறப்பிடமாக அமைவது ஆசையே ஆகும் மனித வாழ்வின் இன்றைய வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் அதுவே காரணமாக கூறப்படுகிறது. எனவே ஆசை என்பதை நல்ல ஆசை, தீய ஆசை என்றும் பொருந்தும் ஆசை, பொருந்தா ஆசை என்றும் வகைப்படுத்தி அதனை சீரமைக்கும் செயலை தற்காலிகத்தார் முன்னெடுப்பதை காண முடிகின்றது.

மனிதனின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள அவனுக்கு உரிமை இருப்பதைப் போல ஆசையும் இருக்கலாம். ஆனால் அவ்வாசை நியாயமானதாக இருக்க வேண்டும். மேலும் அதனை நிறைவேற்றிக் கொள்வதால் சமூகத்திற்கு எந்த சிக்கலும் ஏற்படக் கூடாது என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

**" பற்று என்றும் பாசத்தளையும் பல வழியும்**

**பற்று அறாது ஓடும் அவாத் தேரும், தெற்றெனப்**

**பொய்த்துரை என்னும் புகை இருளும், இம்மூன்றும்**

**வித்து அற வீடும் பிறப்பு " ( திரிகடுகம் பா - 22)**

பற்றி இருப்பவர்களுக்கு எக்காரணம் கொண்டும் வீடு பேரு என்னும் பிறப்பு கிடையாது என்ற சிந்தனை எண்ணற் கூறியது பற்றுவிடும் மனமே இப்பிறப்பு அறுக்கும் என்பதுவே இதன் உள்கிடையாகும்.

**முடிவுரை:**

துறவு என்பது உலக வாழ்வில் உள்ள அனைத்தின் மீதான பற்றினைத் துறப்பது என்ற அடிப்படையை அறிந்து கொள்ள முடிகிறது. துறவறம் என்பதற்கான விளக்கங்கள் கூறப்பட்டுள்ள மதிப்புகள் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. உலகில் உள்ள எந்த பொருளின் மீதும் பற்று வைக்காமையுமான முப்பெரும் கடமைகள் துறவியருக்கு உண்டு. இக்கடமைகளை இனிது நிறைவேற்றுபவர் துறவிகளுக்கான உயர்ந்த மதிப்பினை பெறுவர் என்பது உறுதியாகும் மனித உடலின் இயல்பை உணர்ந்தவரே உண்மையில் சிறப்பான இல்லற வாழ்வை, கடமைகளைச் செய்து பிறகு உயர்வான துறவறத்தை மேற்கொள்ள முடியும் என்ற கருத்துக்களை அறிய முடிகின்றது.

**துணை நூற்பட்டியல்:**

1. க.ப.அறவாணன், அற இலக்கியக் களஞ்சியம், சாரதா பதிப்பகம், ராயப்பேட்டை, சென்னை, பதிப்பு - 5 2010.
2. மு.அருணாச்சலம் ,தமிழ் இலக்கிய வரலாறு, வேமன் பதிப்பகம், சென்னை_ பதிப்பு - 6.2012.
3. சிங்காரவேலு முதலியார், அபிதான சிந்தாமணி, ஜகன்னா நகர், வில்லிவாக்கம், சென்னை_600049.

4. மதுரை தமிழ்ப் பேரகராதி, மீனாட்சி புத்தக நிலையம், மதுரை _625001.

5. தேவநேய பாவாணர், தமிழர் வரலாறு, தேன்தமிழ்ப் பதிப்பகம், சேலம்_பதிப்பு - 3 1981.

6. மு வரதராசனார், அறமும் அரசியலும், நியுசெஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை_2004.

7. திருலோக சீதாராம், மனுநீதி, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1962.

*REFERENCE :*

*1. K.P.Aravanan, Charitable Literary Repository, Saradha Publishing House, Chennai , Edition -5 , 2010*

*2. M. Arunachalam, History of Tamil Literature, Veman Publishing House, Chennai_ Edition - 6.2012.*

*3.Singharavelu Mudaliar, Abhidhana Chintamani, Jaganna Nagar, Villivakkam, Chennai_600049.*

*4.Madurai Tamil University, Meenakshi Bookstore, Madurai _625001.*

*5.Devaneya Bhawanar, History of Tamils, Then Tamil Publishing House, Salem_edition - 3 1981*

*6.Mu Varadarasanar, Virtue and Politics, New Century Bookhouse, Chennai_2004.*

*7.Thirloka Sitaram, Manu Neeti, South Indian Saiva Siddhanta Publication Society, 1962*

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
ARAN International e-Journal of Tamil Research

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.
வரும் 2026, ஜூலை மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள் - ஜூலை 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் ஜூலை இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com